# யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் ஆக்கப் பெயர்கள்

சு. சுசீந்திரராசா

## 1

*1. 0* மொழியில் ஓர் எளிமையான அடிச்சொல் அல்லது ஆக்கம் பெற்ற அடிச்சொல் மேலும் ஆக்க ஒட்டு (derivational affix)[1] ஏற்பதன்மூலமோ சொல்லில் உள்ள உயிர் அல்லது மெய்யொலியில் மாற்றம் பெறுவதன் மூலமோ சொற்பெருக்கத்திற்கு இடமளிக்கிறது. எடுத்துக்காட்டாகத் தமிழில் கல் என்னும் வினையடி – வி என்னும் ஆக்க ஒட்டு (விகுதி) பெற்று கல்வி என அமைகிறது. கெடு என்னும் வினையடியில் உள்ள முதற்குறில் நெடிலாக மாறுவதால் கேடு என்னும் சொல்லைப் பெறுகின்றோம். இவ்வாறு மொழியில் அடிச்சொற்கள் ஆக்கம் பெற்றுப் பெருகும் முறை ஒரு நியதிக்குட்பட்டதாகவே உள்ளது. ஒருசொல் மொழியில் உள்ள எந்த ஒரு ஒட்டையும் ஏற்கும் என்றோ அல்லது எந்த ஒலி மாற்றத்தையும் அடையும் என்றோ கூறிவிட முடியாது.

அடிச்சொல்லும் ஆக்கச்சொல்லும் ஒரே இலக்கண வகையைச் சேர்ந்தனவாகவோ வெவ்வேறு வகையைச் சேர்ந்தனவாகவோ இருக்கக்கூடும். சில ஆக்க ஒட்டுக்கள் அடிச்சொல்லின் இலக்கண வகையை மாற்றிவிடும்; சில மாற்றுவதில்லை. மேலே காட்டிய வினையடிகள் முறையே ஆக்க ஒட்டு ஏற்று, ஒலி மாற்றம் பெற்றுப் பெயர்ச் சொற்கள் ஆக அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் ஆக்க ஒட்டுகள்மூலம் பெயரில் இருந்து பெயரடை அமைகிறது; வினையில் இருந்து பெயர் அமைகிறது; பெயரில் இருந்து வினை அமைகிறது; வினையில் இருந்து பெயரடை அமைகிறது. எடுத்துக்காட்டுகள் முறையே season–seasonal, sing–singer, prison–imprison, accept–acceptable. இவை அனைத்தும் வகை மாறும் ஆக்கங்கள். ஆயின் ஆங்கிலத்தில் hood என்னும் ஒட்டு அடிச்சொல்லின் இலக்கண வகையை மாற்றுவதில்லை. man, manhood ஆகிய இரண்டும் பெயரே. ஆக்க ஒட்டுகள்மூலம் மேலும் மேலும் வகை மாறும் ஆக்கங்களும் உண்டு. manliness, modernisation ஆகிய சொற்களைப் பிரித்துக் காண்க. முறையே man பெயர்; manly பெயரடை; manliness பெயர் எனவும் modern பெயரடை; modernise வினை; modernisation பெயர் எனவும் காணலாம். குறித்த ஓர் ஒட்டைச் சில சொற்கள்மட்டும் ஏற்பதுண்டு. மற்றும் ஓர் ஒட்டைப் பல சொற்கள் ஏற்பதும் உண்டு. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் – hood என்னும் ஒட்டு manhood, nationhood, christhood எனச் சில சொற்களோடுமட்டுமே வரக் காண்கிறோம். தமிழில் – த்தை என்னும் ஒட்டு நட போன்ற ஒரு சில சொற்களோடுமட்டும் வருகிறது. ஆயின் தமிழில் - இ என்னும் விகுதி செயல் முதல் பொருளில் மிகப் பல சொற்களோடு வரக் காண்கிறோம். எடுத்துக்காட்டுகளை கீழே (2. 3) காண்க. குறித்த ஆக்க ஒட்டு ஒன்றினை ஏற்று அமையும் நூற்றுக்கணக்கான புதிய சொற்கள் நீண்டகாலம் வாழாமல் வழக்கிறந்துபோவதும் உண்டு.

அமெரிக்காவில் சில ஆண்டுகட்கு முன் cafeteria என்னும் சொல்லமைப்பை ஒட்டி (–teria என்னும் ஒட்டுப் பெறுவதன்மூலம்) groceteria, booteteria, booketeria போன்ற நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் தோன்றினவாம். இன்று அவற்றுள் பெரும்பாலானவை மறக்கப்பட்ட நிலையிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் உளவாம்.[2]

*1. 1* இங்கு யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் வழங்கும் ஆக்க ஒட்டுகளையும் அவை சேர்வதன்மூலம் தோன்றும் ஆக்கச் சொற்களையும் ஒலிமாற்றம்மூலம் அமையும் ஆக்கச் சொற்களையும் இயன்றவரை விரிவாகக் காண்போம். இவற்றை ஆய்வுப் பயன் கருதித் தேவைக்கேற்ப இலக்கிய வழக்கு, இந்தியப் பேச்சுவழக்கு ஆகியவற்ருேடு ஆங்காங்கு ஒப்பு நோக்கி விவரண அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் காண்போம். இவ்வாறு ஆக்க வடிவங்களின் அமைப்பு, வரலாறு, வழக்குப் போன்றவற்றை ஆராய்வதன்மூலம் தமிழ்மொழியின் தொழிற்பாடுபற்றிய அறிவு தெளிவடையும். சமுதாயத்தில் தோன்றும் புதிய கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற புதிய சொற்களை முறைப்படி உருவாக்கிக் கொள்ளவும் முடியும்.

யாழ்ப்பாணத்துத் தமிழில் ஆக்கப் பெயர்கள் பெயர், வினை, பெயரடை போன்றவற்றை அடியாகக் கொண்டு பிறக்கின்றன. அடியாக நிற்பன ஏற்கும் விகுதிகளும் (ஒட்டுகள்) பலவகை. முதற்கண் அடிகளை பெயரடி, வினையடி, பெயரடை அடி என வகை செய்து பின் ஒவ்வொரு வகையிலும் விகுதிகளைக் கருத்திற்கொண்டு மேலும் வகைப்படுத்துவோம். சில விகுதிகள் ஆக்கத்தில் பெருவழக்கை ஏற்படுத்துகின்றன; பல விகுதிகள் இவ்வாறு பெருவழக்கை ஏற்படுத்துவதில்லை.

*1. 2* வகைப்படுத்தும்போது சிக்கல்கள் எழுவது உண்டு. எடுத்துக்காட்டாக குளிர்ச்சி என்னும் ஆக்கப் பெயரின் அடி பெயரா? வினையா? இங்கு காரணங் காட்டாது வினையென்றே கொள்கிருேம். இத்தகைய சிக்கல் ஒருபுறமிருக்க ஆக்கப் பெயர்களை விளக்கும்போது சந்தி (புணர்ச்சி) அடிப்படையிலே தோன்றும் சிக்கல்களும் உண்டு. இவற்றைத் தனியே ஆராய்தல் வேண்டற்பாலது எனக் கொண்டு ஈண்டு கருத்திற் கொள்ளவில்லை.

## 2

*2. 0* பெயரடி

*2. 1* பால் காட்டும் விகுதி பெற்று அமைவன.[3]

அஃறிணைப் பெயரடிகளுள் சில பால் காட்டும் விகுதி ஏற்றுப் பொருள் மாற்றத்துடன் உயர்திணைப் பெயராக அமைகின்றன.

சில பெயரடிகள் ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டன் விகுதியையும் பெறுவன. பால் காட்டும் விகுதி சிறப்பாகப் பெண்பால் விகுதி பெயரடியைப் பொறுத்து வேறுபடுகிறது.

எ. கா.

| | | |
|---|---|---|
| (அ) | கட்டை | கட்டையன் |
| | | கட்டைச்சி |
| (ஆ) | கரை | கரையான் |
| | | கரையாடிச்சி |
| (இ) | கீரிமலை | கீரிமலையான் |
| | | கீரிமலையாள் |
| (ஈ) | சீம்– | சீமான் |
| | | சீமாட்டி |
| (உ) | செகிடு | செகிடன் |
| | | செகிடி |

மேலே காட்டிய வகைகள் ஒவ்வொன்றிலும் அடங்கக்கூடிய பெயரடிகள் பல உண்டு. அவற்றுட் சிலவற்றைமட்டும் இங்கு காட்டுகிறோம்.

(அ) இடை, தொக்கை, பறை, பெடி, பேய். (ஆ) வெள் – (பெண்பால்). (இ) ஊர், தீவு. (உ) குறுடு, தோழ், விசர்.

சீம் – என்பது கட்டுண்ட (bound) பெயரடியாகும். இது ஏனையவை போன்று தனிவடிவமாக (free form) வழங்குவதில்லை. பாட்டன், பாட்டி, மச்சான், மச்சாள் போன்றவற்றிலும் பெயரடி கட்டுண்ட வடிவமாகவே உள்ளது.

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டின் விகுதியையும் ஏற்கும் பெயரடிகளுள் பல மரியாதை இன்மைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் பன்மை, மரியாதை இன்மைப் பொருள் தொனிக்கும் பெண்பால் பன்மை, மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் – பெண்பால் பொதுப்பன்மை ஆகிய விகுதிகளைப் பெறுவன.

எ. கா.

| | |
|---|---|
| செகிடு | செகிடங்கள் |
| | செகிடியள் |
| | செகிடர் |
| | செகிடரவை |

மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை விகுதி சந்தர்ப்பத்தைப் பொறுத்து ஆண்பால் – பெண்பால் பொதுப்பன்மைப் பொருளையும் தரவல்லது. இவ்வேறுபாட்டை அது ஏற்கும் வினைமுற்றுக் காட்டும். எ. கா. செகிடர் வாறூர், செகிடர் வரீனம். சில பெயரடிகள் பொதுவாக மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமை விகுதி ஏற்று அப் பொருளில் வழங்குவதில்லை. அவை அவ்விகுதியை ஏற்கும்போது ஆண்பால் – பெண்பால் பொதுப்பன்மைப் பொருளையே தருகின்றன.

எ. கா.

| | |
|---|---|
| பறை | பறையர் |
| பேய் | பேயர் |

பால்காட்டும் விகுதியைப் பெறுவனவற்றுள் சில பெண்பால் விகுதியை மட்டும் ஏற்பதில்லை.

எ. கா.

| | |
|---|---|
| கிழங்கு | கிழங்கள் |
| | கிழங்கங்கள் |
| | கிழங்கர் |
| | கிழங்கரவை |

காடை, கிறுக்கு, குரங்கு, சாக்கு, பல்லு, பனி, புளி, மாடு, மொறடு, மோடு, வயிறு, விழல் என்பன காட்டிய வகையில் அடங்கும்.

அஃறிணைப் பெயரடிகள் – காற (-கார்) என்னும் ஒட்டைப் பெற்றுப் பின் பால் விகுதி ஏற்று – காறன், – காறி போன்று முடிவதும் உண்டு.

எ. கா.

| | |
|---|---|
| கடை | கடைக்காறன் |
| | கடைக்காறி |
| வேலை | வேலைக்காறன் |
| | வேலைக்காறி |

தமிழில் காணப்படும் –காற என்பது வடமொழி வடிவம் ஒன்றின் திரிபாகும். வடமொழியில் கும்பகார என வருவதை நினைவிற் கொள்க. – காறன், – காறி ஆகிய விகுதிகள் ஏனைய விகுதிகளைக் காட்டிலும் சொல் லாக்க ஆற்றல் உடையன. எனவே இவை மிகப் பல சொற்களோடு வரு கின்றன. – காரன், – காரி என்பன இலக்கிய வழக்குடையன. ரகரம் சில இடத்துப் பேச்சில் றகரமாக ஒலிக்கப்படுகிறது. – காரன், – காரி பெற்று அமைந்த பெயர்களை இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத் தமிழ்ச் சாசனங்களில் காண்கின்றோம். எ. கா. வேட்டைக்காரர், நிவந்தக்காரர்.

2. 2 பெயரடிகள் – ஆன் விகுதியை ஏற்கின்றன. இவ்விகுதி பெய ரடிக்கு உரிமைப் பொருளைத் தருகிறது. இவ்விகுதியை ஏற்று அமைவன மிகப் பல. இங்கு சில எடுத்துக் காட்டுகளைமட்டும் தருகிறோம்.

எ. கா.

| | |
|---|---|
| அது | அதான் |
| இது | இதான் |
| கிழக்கு | கிழக்கான் |
| தெற்கு | தெற்கான் |
| மேல் | மேலான் |
| வீடு | வீட்டான் |

2. 3 தன்மை குறிக்கும் –த்தனம் என்னும் விகுதியை 44 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

| | |
|---|---|
| ஊதாரி | ஊதாரித்தனம் |

காடை, காவாலி, கிறுக்கு, குப்பை, குரங்கு, குழந்தைப்பிள்ளை, குறும்பு, கோமாளி, கோழை, சண்டி, சிறுபிள்ளை, சேட்டை, சோம்பேறி,

நட்டாமுட்டி, நாட்டாண்மை, புத்திசாலி, பேடி, பேய், போக்கிலி, போலி, பொறுக்கி, முட்டாள், மொக்கு, வம்பு, விசர், விடுகாலி, விளையாட்டு, வெருளி, வேசை என்பனவும் அசடு, அற்பம், கசவாரம், கஞ்சம், கஞ்சல், கள்ளம், குள்ளம், குறுடு, பகடு, பட்டிக்காடு, பிடிவாதம், மிருகம், முறடு, மோடு என்பனவும் இவ்வகையில் அமைவன.

2.4 செயல் முதற்பொருளைக் குறிக்கும் – இ விகுதியை 9 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

உபகாரம் உபகாரி

சந்தர்ப்பவாதம், ஞானம், தியாகம், தீவிரவாதம், பயங்கரவாதம், பாவம், பிரிவினைவாதம், லோபம்.

- அம் விகுதி பெற்றுத் தமிழில் அமைந்த சொற்கள் – இ விகுதி பெற்றன. இவற்றுள் சில அண்மைக் காலத்தில் பேச்சுவழக்கிற்கு வந்தவை.

2.5 ஆளி என்னும் விகுதியை 22 பெயரடிகள் ஏற்கின்றன.' இவ் விகுதி 'ஆட்சி', 'உடைமை' என்னும் பொருளைத் தருகிறது.

எ. கா.

உழைப்பு உழைப்பாளி

உறவு, கடன், காவல், குற்றம், கூட்டு, கொடை, சுற்றம், செலவு, தொழில், நோய், பகை, பங்கு, படிப்பு, படைப்பு, பாத்திரம், பேச்சு, பொறுப்பு, போர், முதல், வழக்கு, விருந்து என்பன இவ்வகையில் அடங்கும்.

2.6 தன்மை குறிக்கும் – மை விகுதியை 2 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஆண் ஆண்மை

பெண்.

2.7 – வாசி என்னும் விகுதியை 5 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அரை அரைவாசி

அரைக்கால், கால், முக்கால், விலை என்பனவும் இவ்விகுதியை ஏற்கின்றன. இவ்விகுதி பெரும்பாலும் பின்னத்துடன் வருகிறது. சுகவாசி, முகவாசி என்ற சொற்களும் வழக்கில் உண்டு. ஆயின் இவ்விரு சொற்களிலும் வரும் – வாசி வேறு பொருளைத் தருகிறதா எனச் சிந்தித்தல் வேண்டும்.

2. 8 உடைமைப் பொருள் தரும் – சாலி என்னும் விகுதியை 11 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அதிட்டம் அதிட்டசாலி

அனுபவம், குணம், தந்திரம், திறமை, தைரியம், பலம், பாக்கியம், புத்தி, பொறுமை, மூளை என்பன இவ்வாறு அமைவன.

2. 9 – மான் என்னும் விகுதியை 5 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

கல்வி கல்விமான்

சாதி, நீதி, பக்தி, புத்தி என்பன இவ்வகையில் அடங்கும்.

2. 10 – வான் என்னும் விகுதியை 4 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

சத்தியம் சத்தியவான்

பாக்கியம், புண்ணியம், யோக்கியம் என்பன இவ்வகையில் அடங்கும்.

2. 11 – கரம் என்னும் விகுதியை 6 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

உணர்ச்சி உணர்ச்சிகரம்

சந்தோஷம், துக்கம், பயம், மகிழ்ச்சி, வெற்றி என்பன இவ் வகையின.

2. 12 – மாரி என்னும் விகுதியை 4 பெயரடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஆண் ஆண்மாரி

சோறு, பெண், வயிறு என்பன இவ்வகையில் அடங்கும். சோறு, வயிறு என்பன முறையே சோத்துமாரி, வயித்துமாரி என அமையும்.

2.13 – வந்தர் என்னும் விகுதி ஒரேஒரு பெயரடியுடன் மட்டும் வருகிறது.

எ. கா.

செல்வம் செல்வந்தர்

## 3

3. 0 வினையடி

3. 1 பெயரடிகள்போல வினையடிகளும் பால் காட்டும் விகுதி பெறு கின்றன:

எ. கா.

| | |
|---|---|
| தட்டு | தட்டான் |
| | தட்டாத்தி |
| கொல்(லு) | கொல்லன் |
| | கொல்லங்கள் |
| | கொல்லச்சி |
| | கொல்லச்சியள் |
| | { கொல்லர் |
| | { கொல்லரவை |
| கொதி | கொதியன் |
| | கொதியங்கள் |
| | கொதியர் |
| | கொதியரவை |

இங்கும் பால் விகுதி வினையடியைப் பொறுத்து வேறுபடுகிறது. சில வினையடிகள் பால் காட்டும் விகுதிகளுள் சிலவற்றை ஏற்பதில்லை. எடுத்துக் காட்டாக கொதி என்னும் வினையடி பெண்பால் விகுதியை ஏற்பதில்லை. கொல்லர் என்னும் சொல் வழக்கில் இருப்பினும் அது மரியாதைப் பொருள் தொனிக்கும் ஆண்பால் ஒருமைப் பொருளில் வழங்காது ஆண் பால் — பெண்பால் பொதுப்பன்மைப் பொருளிலே மட்டும் வழங்கக் காண கிறோம். கொதியர் என்னும் ஆக்கப்பெயர் மரியாதைப் பொருள் தொனிக் கும் ஆண்பால் ஒருமையிலும், ஆண்பால் — பெண்பால் பொதுப்பன்மை யிலும் வழங்கக் காண்கிறோம்.

– காறன், – காறி போன்ற விகுதிகள் பெயருக்கும் வினைக்கும் பொது வாக உள்ள சில அடிகளோடு சேர்ந்துவரக் காண்கிறோம். எ. கா. வெட்டு: வெட்டுக்காறர். அவை தனிவடிவங் கொண்ட வினையடிகளுடன் சேர்ந்து வரக் காணோம். எழுது, எழுத்து என வினைக்கும் பெயருக்கும் தனிவடிவங் கள் காணப்படும்போது – காறன், – காறி ஆகியவை வினையடியுடன் வராது பெயரடியுடன் மட்டும் வரக் காண்கிறோம். இவ்வாக்கத்தை விதி விலக்காகக் (1. 2) கொள்தல் வேண்டும்.

3. 2 – தனம் என்னும் விகுதியை எதிர்மறை வினைகள் (எச்சங்கள்) ஏற்கின்றன.

எ. கா.

அறியா அறியாத்தனம்

தெரியா, புரியா, விளங்கா ஆகிய மூன்றும் இவ்வகையின.

3. 3 செயல் முதற்பொருள் குறிக்கும் – இ விகுதியை 28 வினையடி கள் ஏற்கின்றன.

எ. கா.

அணுப்பு அணுப்பி

அதட்டு, அலட்டு, அளாப்பு, இடுக்கு, உயர், எதிர், ஏமிலாந்து, கடத்து, குளறு, கொளுவு, சப்பு, சளாப்பு, சறுக்கு, சிணுங்கு, சுறண்டு, சூப்பு, தூங்கு, நக்கு, நொண்டு, பதுங்கு, புளுகு, பொறுக்கு, மளுப்பு, மூடு, வார், விசிறு, வெருள் என்பன இவ்வகையில் அடங்கும்.

ஆடு, ஆட்டு என்னும் வினையடிகள் –இ விகுதி பெற்று வேறு சில பெயரடிகளுடன் நின்று தொகைச் சொற்கள் போன்று அமைவதும் உண்டு.

எ. கா.

| | |
|---|---|
| சூதாடு | சூதாடி |
| பாம்பாட்டு | பாம்பாட்டி |

கூத்தாடு, குரங்காட்டு, சூத்தாட்டு, தலையாட்டு, பெண்டாட்டு, பேயாட்டு ஆகியவற்றைக் காண்க. சூதாடி, பாம்பாட்டி போன்ற வடிவங்களில் உள்ள விகுதி முறையே – ஆடி, – ஆட்டி எனக் கொள்வோரும் உளர்.

நன்னூல் உரைகாரர் – இ விகுதியின் செயல் முதற்பொருளை உணர்ந்து 'வினைமுதற் பொருள்' என்றனர். கால்டுவெல் தமிழில் உள்ள – இ விகுதி வடமொழியில் இதே பொருளைத் தரும் – இ விகுதியில் இருந்தும் வேறுபட்டது எனக் காட்டினர்.

தமிழில் – அல் போன்ற சில விகுதிகளும் வினைமுதற் பொருளைத் தருவனவாயினும் (இலக்கிய வழக்கில் ஏந்தல், தோன்றல்), – இ விகுதி போலச் சொற்களைப் பெருக்குவனவன்று. சேர்ந்தாரைக் கொல்லி (குறள் 306), குடிதாங்கி (பெருந்தொகை) எனப் பண்டு வழங்கியதுபோல இன்றும் புதியதொகை ஆக்கங்களில் (compound formations) செயல்முதற் பொருளைத் தருவது –இ விகுதியேயாம்.

எ. கா.

| | | |
|---|---|---|
| ஏறு | ஏறி | சோம்பேறி |
| | | மரமேறி |
| | | வந்தேறி |
| ஓட்டு | ஓட்டி | கார்ஓட்டி |
| ஓடு | ஓடி | நாடோடி |
| | | முன்னோடி |
| காட்டு | காட்டி | ஆள்காட்டி |
| | | கைகாட்டி |
| | | திசைகாட்டி |
| | | நாள்காட்டி |
| | | வழிகாட்டி |
| கொத்து | கொத்தி | மரம்கொத்தி |
| | | மீன்கொத்தி |
| கொல் | கொல்லி | பூச்சிகொல்லி |
| தாங்கு | தாங்கி | இடிதாங்கி |
| | | சுமைதாங்கி |

| | | |
|---|---|---|
| தின் | தின்னி | பழந்தின்னி |
| நோக்கு | நோக்கி | தொலைநோக்கி |
| பேசு | பேசி | தொலைபேசி |
| வருடு | வருடி | அடிவருடி |
| வெட்டு | வெட்டி | பாக்குவெட்டி |
| | | மண்வெட்டி |

சேர்ந்தாரைக் கொல்லி என்னும் திருக்குறள் தொடரிலேதான் – இ விகுதி வினைமுதற் பொருளில் முதன்முதலாகக் காணப்படுகிறது. இதனைச் சங்க இலக்கியங்களில் காணோம்.

3. 4 சில வினையடிகள் – ஐ விகுதி பெற்றுப் பெயராக அமைகின்றன.

எ. கா.

கிட கிடை

சும, நட, பிற என்பனவும் இவ்வகையில் அடங்கும். இந்த அடிச் சொற்கள் ஒரு காலத்தில் உடன்படுமெய் ஏற்காது இகரத்தைப் பெற்று அமைந்தன என எண்ணுவதற்கு இடமுண்டு: கிட + இ, சும + இ போன்று.

உடு, உருள், எடு, ஓடு, கல், கவல், கொடு, கொல், கொள், சவள், சுறுள், தடு, திரண், திரள், நில், நிறு, பகு, படு, வகு, வறு, விடு, வில் ஆகியனவும் – ஐ விகுதி பெறுவன.

3. 5 – வி விகுதி பெறும் வினையடிகள் 5 ஆகும்.

எ. கா.

கல் கல்வி

கேள், துற, தோல், பிற என்பன ஏனையவையாகும்.

3. 6 – தல் விகுதி பெறுவன 3 வினையடிகளாகும்.

எ. கா.

ஆறு ஆறுதல்

கெடு, தேர் என்பன ஏனையவை.

நோதல் என்னும் ஒரு சொல்லை யாழ்ப்பாண வழக்கு எனச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி குறித்துள்ளது. ஆயின் இச்சொல் இன்றும் பேச்சு வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை.

3. 7 – வான் விகுதியை 2 வினையடிகள் மட்டும் ஏற்கின்றன.

எ. கா.

கக்கு கக்குவான்

பயில்.

3. 8 – வாணி விகுதி பெறும் வினையடி ஒன்றே ஆகும்.

எ. கா.

நட்டு தட்டுவாணி

3. 9 – அவு விகுதி பெறுவன 5 வினையடிகள்.

எ. கா.

உண் உணவு

– உழ், கள், செல், வா (வர்–).

3. 10 – வை என்னும் விகுதியை 14 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அள அளவை

இழு, கட, கல, கோர், சேர், தாழ், நடு, பற, பார், போர், விழு, வெழு, வேர்.

நடு என்னும் வினையடி – வை விகுதி பெற்றுத் தரும் பொருளை – கை விகுதி ஏற்பதன்மூலமும் தருகிறது. (3. 18)

3. 11 – ச்சு விகுதி ஏற்பன 4 வினையடிகள்.

எ. கா.

பிணை பிணைச்சு

குழை, முடி, வரி.

3. 12 – பு விகுதியை 2 வினையடிகள் பெறுகின்றன.

எ. கா.

இயல் இயல்பு

முடி.

– பு விகுதி – வு ஆக மாற்றம் பெற்றதைச் சொற்களில் காணலாம். சங்க இலக்கியங்களில் – பு விகுதி பெற்றுவருவன – வு விகுதியுடன் காணப் படுகின்றன. அழிபு – அழிவு (குறுந்தொகை), இழிபு – இழிவு (தொல்காப் பியம்), துணிபு – துணிவு, பிரிபு – பிரிவு (அகநானூறு) போன்ற சொற் களைக் காண்க. – வு பெற்றுவரும் சொற்கள் அனைத்திற்கும் – பு கொண்ட வடிவங்கள் காணப்படவில்லை. எடுத்துக்காட்டு அறிவு, பொலிவு. இன்றும், முடிபு – முடிவு ஆகிய இரு வழக்குகளும் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக் கில் இருப்பதைக் காண்க.

3. 13 – வு விகுதி பெறுகின்ற வினையடிகள் 52 ஆகும்.

எ. கா.

அசை அசைவு

அடை, அணை, அலக்கழி, அழி, அள, அறி, இழ, ஈ, உணர், உய், உயர், உலை, உழை, எரி, ஒழி, ஓய், கசி, கழி, கிழி, குறை, சரி, சா, சாய், சார், சிதை, சோர், தறி, தாழ், துணி, துற, தெரி, தொய், நிறை, நினை, நெரி, நெளி, பதி, பணி, பிரி, பிள, பொலி, பொறி, மலி, மறை, முடி, முறி, மெலி, வளை, வாழ், விடி, விளை.

3. 14 – த்தி விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அடர் அட(ர்)த்தி

குளிர், நேர், வளர்.

3. 15 – தி விகுதியை ஏற்கும் வினையடிகள் 11 ஆகும்.

எ. கா.

அயர் அயர்தி

அசர், அறு, இறு, கெடு, செய், தகு, பற, பொறு, மற, விடு.

3. 16 – ச்சி விகுதி பெறுபவை 14 வினையடிகள் ஆகும்.

எ. கா.

அதிர் அதிர்ச்சி

ஆராய், இகழ், உயர், எழு, கவர், கிளர், குளிர், சூழ், தளர், தொடர், மகிழ், வளர், வீழ்.

வள(ர்)த்தி (3. 15), வளர்ச்சி என்பன பெரும்பாலும் ஒரே பொருளைத் தருவன. விவரண அடிப்படையில் இரண்டையும் கட்டிலா மாற்றமுடைய வடிவங்கள் (free variants) எனலாம். ஆயின் வரலாற்று நோக்கில் அவை வேறுபட்ட இரு தோற்றங்கள் ஆகும். இன்று குளி(ர்)த்தி என்னும் சொல் கோயில்பற்றி வருகிறது. அங்கும் குளிர்ச்சி என்னும் பொருள் உண்டு.

3. 17 – சி விகுதியை எட்டு வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஆள் ஆட்சி

சுழல், பயில், புகழ், புரள், முயல், மீள், வறள்.

3. 18 – கை விகுதியை 6 வினையடிகள் பெறுகின்றன.

எ. கா.

அழு அழுகை

கொள், செய், திரி, தொழு, நடு.

நடு என்னும் வினையடி – கை விகுதிக்குப் பதிலாக – வை விகுதியை யும் ஏற்பது உண்டு. நடுகை, நடுவை ஆகிய இரண்டிற்கும் பொருள் வேறு பாடு இல்லை எனலாம்.

3. 19 – க்கை விகுதி ஏற்கும் வினையடிகள் 6 ஆகும்.

எ. கா.

அறி அறிக்கை

இரு, எச்சரி, கிட, படு, வாழ்.

3. 20 – மை விகுதியை 10 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

இனி இனிமை

குளிர், கூர், தலை, தாழ், நிலை, நேர், பகை, பொறு, வலி.

3. 21 – மதி விகுதி பெறுவன 8 வினையடிகள்.

எ. கா.

இறக்கு இறக்குமதி

ஏத்து, குடு (குடுக்கு–), சேர், தா (தரு–), பெறு, போ, வா (வரு–).

3. 22 – ச்சல் விகுதியை 16 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அலை அலைச்சல்

இரை, உலை, எரி, கழி, காய், குறை, கை, துணி, தேய், நரை, பறை, பாய், புகை, மேய், விளை.

இவற்றைக் கிளைமொழிகளில் காணப்படும் தனித் தோற்றங்கள் எனக் கொள்ளலாம். கிளைமொழிகள் சொல்லாக்கத்தில் தனிப்போக்குடை யன; இலக்கியத்தின் போக்கில் இருந்து வேறுபடுவன. துணிச்சல், துணிவு ஆகிய வடிவங்களைக் காண்க. அண்மைக் காலத்தில் துணிச்சல் என்னும் சொல் இலக்கிய வழக்கிலும் கையாளப்பட்டு வருகிறது. ஆக்க வேறு பாட்டைப் பின்வரும் சொற்கள் விளக்கும்.

| கிளைமொழி | இலக்கியமொழி |
|---|---|
| அலைச்சல் | அலைவு |
| கைச்சல் | கைப்பு |
| விளைச்சல் | விளையுள் |
| | விளைவு |

பறைச்சல் என்னும் சொல் தமிழ்க் கிளைமொழிகளுள் யாழ்ப் பாணத்து வழக்கில்மட்டும் காணப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகப்

பேரகராதி இச்சொல்லைத் தருகிறது. எமனோ, பரோ ஆகியோர் அமைத்த திராவிட அடிச்சொல் வரலாற்று அகராதி (Dravidian Etymological Dictionary) மலையாளத்திலிருந்து பறயுக, பறச்சல் ஆகிய இரண்டையும் தருகிறது.

– த்தல் விகுதி தொழிற்பெயர் விகுதியாக மட்டும் மொழியில் வருகிறது. இது பேச்சுவழக்கில் வரக் காணோம். – தல் விகுதி தொழிற்பெயர் விகுதியாக இலக்கிய வழக்கில் வருகிறது. பேச்சுவழக்கில் பெயராக்க விகுதியாகவும் வருகிறது. – ச்சல் என்னும் பேச்சுவழக்கு விகுதிக்கு ஆதாரம் – த்தல் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆறுதல், கெடுதல், தேர்தல் எனப் பேச்சில் காண்க. பேச்சில் 'கெடுத்தல்' என்பாரில்லை எனலாம்; 'கெடுக்கிறது' என்றே கூறுகிறார்கள்.[4] கழித்தல், கழிச்சல் என்பன பேச்சுவழக்கில் உண்டு. இவை இரண்டும் வெவ்வேறு பொருளைத் தருவன. கழித்தல் என்பது இலக்கிய வழக்கில் இருந்து கணித்தத்தைக் குறிக்கவந்த சொல்லாகும்.

3. 23 – அல் விகுதியை 59 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அவி அவியல்

அழுகு, இடி, இர, இருமு, ஏவு, கடை, கரை, கிண்டு, கிழி, குடு, குவி, குழை, குளி, கொந்து, கொளுவு, சமை, சாம்பு, சிக்கு, சிவு, சுண்டு, சோம்பு, தடங்கு, தப்பு, தவ்வு, தறி, துப்பு, தும்மு, துவை, தூறு, தை, தொங்கு, நக்கு, நசி, நாறு, நீக்கு, நெளி, படை, பாடு, பிசங்கு, பின்னு, பிச்சு, புதை, புலம்பு, பெருக்கு, பொங்கு, பொரி, மறி, மின்னு, முத்து, முறி, மோது, வத்து, வளை, வறு, வாங்கு, வாடு, விக்கு, வெம்பு.

3. 24 – ப்பு விகுதியை 90 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அங்கலாய் அங்கலாய்ப்பு

அடு, அடை, அமை, அரி, அறிவி, அருவரு, அலு, அழை, அறி, இர, இரு, இளி, இற, இறை, இனி, உடு, உழை, உறு, உறை, எடு, எதிர், ஏய், ஒழி, ஒறு, ஓங்காளி, கச, கட, கடு, கல, கழி, களை, கறு, கனை, குதி, குளி, குறி, கை, கொதி, கொப்புளி, கொழு, சமாளி, சிரி, சிவ, சிற, சுணை, செழி, தடி, தடு, தாளி, திகை, தீர், துடி, துடை, துற, நட, நடி, நினை, நெளி, பதி, பதை, படி, படை, பழு, பற, பிடி, பிழை, பிற, புளி, பொறு, மதி, மடி, மலை, மறு, மன்னி, மித, முழி, மூ, மூதலி, வகு, வலி, வாய், விதை, விடு, விரி, விறை, வெடி, வெறு, வேய், வை.

தொகைச் சொற்களும் – ப்பு விகுதி பெறுவது உண்டு.

எ. கா.

அன்பளி அன்பளிப்பு

மொழியெர்

ஒலிக்குறிப்பு வினைச்சொற்களும் -ப்பு விகுதி பெறுகின்றன.

எ. கா.

கடகட கடகடப்பு

கலகல, கறகற, குமுகுமு, சலசல, சுறுசுறு, பதைபதை, படபட, பளபள, பரபர, பிசுபிசு, புறுபுறு, மினுமினு, முணுமுணு, வழவழ, விறுவிறு.

3. 25 – ம் விகுதி பெறும் வினையடிகள் 3 ஆகும்.

எ. கா.

சின சினம்

நய, மண.

3. 26 – அம் விகுதி பெறும் வினையடிகள் 61 ஆகும்.

விகுதியை ஏற்கும்போது தோன்றும் ஒலி மாற்ற அடிப்படையில் இவ்வினையடிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

எ. கா.

| | |
|---|---|
| அடக்கு | அடக்கம் |
| இரங்கு | இரக்கம் |
| கூசு | கூச்சம் |

3. 26. 1 அகல், அழுத்து, ஆட்டு, இணக்கு, இறக்கு, உயர், உருக்கு, ஊக்கு, எட்டு, எண்ணு, எழுப்பு, ஏத்து, ஏமாத்து, ஒடுக்கு, ஒதுக்கு, ஓட்டு, கட்டு, கலக்கு, குலுக்கு, குழப்பு, கூட்டு, சுணக்கு, சுருக்கு, தாக்கு, தாழ், திருத்து, திருப்பு, தேக்கு, தேட்டு, நீட்டு, நீள், நெருக்கு, நோக்கு, பிணக்கு, பெருப்பு, பெருக்கு, பொருத்து, மதி, மயக்கு, முழக்கு, வருத்து, வளை, வழக்கு, வாட்டு, விருப்பு, விளக்கு.

3. 26. 2 ஏங்கு, சிணுங்கு, தயங்கு, தூங்கு, நடுங்கு, புழுங்கு, வீங்கு.

3. 26.3 கொண்டாடு, தள்ளாடு, திண்டாடு, நாடு, மாறுடு.

3. 27 – ப்பை விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

கிலுகிலு கிலுகிலுப்பை

குடுகுடு.

3. 28 – அடி விகுதியை 5 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

கலக்கு கலக்கடி

காவு, கிட்டு, குழப்பு, நெருக்கு.

3. 29 – வாய் விகுதி பெறுவன 3 ஆகும்.

எ. கா.

எழு எழுவாய்

கழு, வா (வரு-).

3.30 – முதல் விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

கொள் கொள்முதல்

பறி.

3. 31 – வாக்கு விகுதி பெறும் வினையடி ஒன்றே ஆகும்.

எ. கா.

செல் செல்வாக்கு

3. 32 – அன் விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

கல கலவன்

குதி.

– அன் விகுதி முன்பும் (2. 1) காட்டப்பட்டது. பொருள் அடிப்படையில் வெவ்வேறு விகுதிகளாகக் கொள்தல் வேண்டும்.

3. 33 – அரம் விகுதி பெறுவன 2 ஆகும்.

எ. கா.

நிலவு நிலவரம்

விளம்பு.

3. 34 – வாளம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

கடி கடிவாளம்

3. 35 –அவம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

தாண்டு தாண்டவம்

3. 36 –ஆளம் விகுதியை 2 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

ஏர் – ஏராளம்

தார் –

தாராளம் என்னும் சொல்லில் வரும் தார் - என்னும் அடிச்சொல் தமிழில் தனித்து வழங்குவதில்லை. இச்சொல்லைச் சென்னைப் பேரகராதி dhara என்னும் வடமொழிச் சொல்லில் இருந்து பெற்றதாகக் கூறுகிறது.

3. 37 – இடம் விகுதி பெறும் வினையடி ஒன்றே ஆகும்.

எ. கா.

கட்டு கட்டிடம்

3. 38 – அணம் விகுதி பெறுவன 3 ஆகும்.

எ. கா.

ஒத்து ஒத்தணம்

கட்டு, தூக்கு.

3. 39 – த்தை விகுதி பெறும் வினையடிகள் 2 ஆகும்.

எ. கா.

பூ பூத்தை

நட.

பூத்தை என்னும் சொல் யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் கெட்ட நடத்தையுடைய பெண்ணைக் குறிக்கிறது. பேத்தை என்னும் சொல்லும் வழக்கில் உண்டு. இது வால்பேத்தை எனத் தொகையிலும் வருகிறது. பேத்தை என்பதன் அடிச்சொல் தெளிவாக இல்லை. – த்தை விகுதி பழைய இலக்கியங்களில் வரக் காணேம். இது கன்னடத்திலும் தெலுங்கிலும் வினையோடு ஆக்க விகுதியாக வருகிறது. எமனோ, பரோவின் அகராதியில் 252, 1114, 1551, 1763, 2957, 3564 என எண்ணிடப் பெற்ற சொற்களைக் காண்க.

3. 40 – அத்து விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

வா(வர்–) வரத்து

3.41 – க்கு விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

போ போக்கு

3.42 – தம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

தாளி தாளிதம்

3.43 – த்தம் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

பிடி பிடித்தம்

3.44 – ய் விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கிறது.

எ. கா.

நோ நோய்

3.45 – மானம் விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

அடை அடைமானம்

தீர், தேய், பெறு.

3.46 – குணி விகுதியை ஒரு வினையடி மட்டும் ஏற்கின்றது.

எ. கா.

அழு அழுகுணி

3.47 – படி விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

கட்டு கட்டுபடி

குழறு, செல் (செல்லு), தள்ளு.

வரும்படி என்னும் பெயரில் உள்ள – படி வடிவத்திலே ஒத்த வேறு விகுதி எனக் கொள்தல் பொருத்தமாகும்.

3.48 – பனவு விகுதியை 4 வினையடிகள் ஏற்கின்றன.

எ. கா.

குடு குடுப்பனவு

குடி, தின், படி, வில்.

கொள்வனவு என்னும் சொல்லில் – வனவு வந்துள்ளது. ப > வ மாற்றம் எனக் கருதலாம். முடிபு – முடிவு போன்ற சொற்களைக் கருத்திற் கொள்க.

3. 49 – பனை விகுதியை 3 வினையடிகள் பெறுகின்றன.

எ. கா.

கல் கற்பனை

படி, வில்.

3. 50 சொல்லின் ஈற்றுயிர்க்கு முதலுயிர் (penultimate vowel) நீட்டம் பெறுவது 7 வினையடிகளில் ஆகும்.

எ. கா.

இடு ஈடு

கெடு, சுடு, தின், நக்கு, படு, பெறு.

தலையிடு, முறையிடு, அடிபடு, இடிபடு, உடன்படு, எடுபடு, கட்டுப்படு, குத்துப்படு, தட்டுப்படு, தேவைப்படு, பிடிபடு, முட்டுப்படு, வெட்டுப்படு என அமையும் சொற்களையும் இங்கு கருத்திற் கொள்க.

3. 51 வினையடியில் உள்ள ஈற்று மெய் இரட்டித்துப் பெயராக அமையும் மாற்றத்தை 14 வினையடிகளில் காண்கிறோம்.

எ. கா.

உருகு உருக்கு

எழுது, ஏசு, ஒழுகு, ஓடு, கருது, கூடு, பாடு, பூசு, பெருகு, முழுகு, மூசு, விளையாடு, வீசு.

## 4

4. 0 பெயரடை அடி

4. 1 பால் காட்டும் விகுதியைப் பெறும் பெயரடை அடிகள் 3 ஆகும்.

எ. கா.

சின்ன சின்னவன்
சின்னவங்கள்
சின்னவள்
சின்னவளவை
சின்னவர்
சின்னவா
சின்னவை
சின்னது
சின்னதுகள்

பெரிய, மற்ற.

4. 2 – ஐ விகுதி பெறும் பெயரடை அடிகள் 9 ஆகும்.

எ. கா.

அரும் அருமை

இளம், கடும், கரும், கொடும், திறம், பழம், பெரும், வெறும்.

4. 3 – மை விகுதி பெறும் பெயரடை அடிகள் 3 ஆகும்.

எ. கா.

தனி தனிமை

புது, மெது.

## குறிப்பு

1. '(ஆக்க) ஒட்டு', 'விகுதி' என்னும் பிரயோகங்களுக்குப் பதிலாக 'சொல்லாக்கச் சொல்லியன்' என்னும் பிரயோகத்தை அறிஞர் சிலர் கையாள்கின்றனர். இவ்வாய்வில் 'விகுதி' என்னும் சொல் குறிக்கும் விரிந்த பொருளைத் தெளிவாக உணர்ந்துகொள்தல் வேண்டும்.

2. காண்க: Charles F. Hockett (1958) A Course in Modern Linguistics, Macmillan, p. 308.

3. தமிழில் பொதுவாக ஒருவரைக் குறிக்குஞ் சொல் (பால் காட்டும் சொல்) மேலும் ஆக்க விகுதிகளைப் பெறுவதில்லை. ஆயின் ஆங்கிலம் போன்ற சில மொழிகள் ஏற்பதுண்டு. ஆங்கிலத்தில் பின்வரும் ஆக்கங்களைக் காண்க.

| | |
|---|---|
| chemist | chemist–ry |
| confectioner | confectioner–y |
| linguist | linguist–ics |
| villain | villain–y |

4. தொழிற் பெயரையும் ஆக்கப் பெயரையும் வேறுபடுத்தல் வேண்டும். வினையடியில் இருந்து இருவகைப் பெயர்களை ஆக்குகிறோம். ஒன்று செய்– தல் போன்ற வகை. மற்றது செய் - கை போன்ற வகை. இரு வகைப் பெயர்களும் வேற்றுமை உருபை ஏற்கும். ஆயின் அடைகளை ஏற்பதில் இரண்டிற்குமிடையே வேறுபாடுண்டு. செய்தல்வகை வினையடைகளை மட்டுமே ஏற்கும்; செய்கைவகை பெயரடைகளை மட்டுமே ஏற்கும். முதல்வகை தொழிற் பெயர்; இரண்டாவதுவகை ஆக்கப் பெயர். இந்த வேறுபாட்டைக் கால்டுவெல் கூறியுள்ளார். காண்க: Caldwell, R. (1961) A Comparative Grammar of the Dravidian Languages, Madras. pp. 542 – 45.

இப்பெயர்கள் இரண்டும் மேலும் ஒருவகையில் வேறுபடுகின்றன. ஆக்கப் பெயர் பன்மையாக (விகுதி பெற்று) வழங்குவதுண்டு; தொழிற் பெயர் இவ்வாறு வழங்குவதில்லை. செய்கைகள் என்பர். செய்தல்கள் என்பாரில்லை. இலக்கிய வழக்கில் ஆக்கப் பெயருடன் பால் காட்டும் விகுதியைச் சேர்த்து வழங்க முடியும்: செய்கை, செய்கையன், செய்கை–ஆள்–அன் செய்கையாளன். தொழிற் பெயர் இவ்வாறு வழங்குவதில்லை. மேலும் தொழிற் பெயருக்கு ஒத்த எதிர்மறைச் சொல் உண்டு; ஆனால் ஆக்கப் பெயருக்கு இல்லை. எடுத்துக்காட்டாக செய்தல் - செய்யாமை.

## உசாவியவை


கருணாகரன், கி. இராம. சுந்தரம் (1971) "பேச்சுத்தமிழில் ஆக்கப் பெயர்கள்", செந்தமிழ்ச் செல்வி, தொகுதி 46, எண் 2, சென்னை.

பவணந்தி, நன்னூல்.

Agesthialingom, S. (1964) "Tamil Nouns", Anthropological Linguistics, 6 No. 1. 7 - 12, Bloomington.

Burrow, T. and Emeneau, M. B. (1961) A Dravidian Etymological Dictionary, Oxford.

Ibid. (1968) A Dravidian Etymological Dictionary supplement, Oxford.

Charles F. Hockett (1958) A Course in Modern Linguistics, Macmillan.

Kamaleswaran, K. S. (1974) Nouns in Tamil, Ph.D. diss. (unpublished), Annamalai University, Annamalainagar.

Meenakshisundaran, T. P. (1965) A History of Tamil Language, Poona.

Robert Caldwell (1956, 3rd ed.) A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, Madras.

Shanmugam, S. V. (1971) Dravidian Nouns, Annamalai University, Annamalainagar.

Shanmugampillai, M. (1961) "Derivative Nouns in Modern Tamil", Indian Linguistics, Vol. 22, Poona.

Suseendirarajah, S. (1967) A Descriptive study of Ceylon Tamil with special reference to Jaffna Tamil, Ph. D. Diss. (unpublished), Annamalai University, Annamalainagar.